அ.வ எண் 161/2020(வாசா1)ராமசாமி தேதி:28.06.2022

1,2 தரப்பில் குறுக்கு விசாரணை.

நான் பள்ளிகூடம் படித்ததில்லை. எனக்கு 62 வயதாகிறது. நான் குடியிருந்து வரும் கதவு எண்.33/பி வீரவாஞ்சிநகர் 1வது தெரு வீடு வாடகை வீடாகும். நான் மேற்படி வீட்டில் 12 வருடங்களாக வசித்து வருகிறேன். மேற்படி வீட்டின் உரிமையாளர் குருசாமிநாயக்கர் ஆவார். மாதம் ரூ.4,000/– வாடகை கொடுக்கிறேன். 12 வருடங்களாகவும் மேற்படி குருசாமி நாயக்கரிடம்தான் மேற்படி வீடு இருக்கிறது. நான் லாரி டிரைவர் என்றால் சரிதான். 1981 வருடம் நான் ஓட்டுநர் உரிமம் பெற்றேன். மேற்படி உரிமம் அடிப்படையில் நான் நெஷனல்பெர்மிட் வாகனம் ஓட்டினேன் என்றால் யாராவது கூப்பிட்டால் வாகனம்ஓட்ட செல்வேன். எனக்கு ஒரு மகன் ஒரு மகள் இருக்கிறார்கள். எனது மகன் பொறியியல் பட்டபடிப்பு படித்துள்ளார். எனது மகனுக்கு திருமணம் ஆகிவிட்டது. அவர் சென்னையில் பணிபுரிகிறார் தற்போது கொரானா நோய் கட்டுபாடுகாரணமாக வீட்டிலிருந்து பணிபுரிகிறார். எனது மகளுக்கும் திருமணம் ஆகிவிட்டது. எனது மகள் 12 ம்வகுப்பு வரை படித்துள்ளார். எனது மருமகன் சென்னையில் எலக்ரிக்ட் கம்பெனியில் பணிபுரிந்து வருகிறார் எனது மகள் சென்னையில் வசித்து வருகிறார். இந்த வழக்கில் உள்ள 2 ம்பிரதிவாதி நீதிமன்றத்தில் இன்று அமர்ந்திருக்கிறார் அவர் எனது மூத்தசகோதரியான 1 ம்பிரதிவாதியின் மகன் ஆவார். மேற்படி 2 ம்பிரதிவாதிக்கு வலது கால் கிடையாது என்றால் சரிதான். 2 ம்பிரதிவாதிக்கு எப்படி வலது கால் போனது என்றால் அவர் கிணற்றில் விழுந்துவிட்டு அதனால் கால்போனதாக சொன்னார்கள். அவ்வாறு பக்கத்துதோட்டத்துக்காரர் என்னிடம் சொன்னார். அதைகேட்டு நான் 2 ம்பிரதிவாதி பார்க்கசென்றேன். சுமார் 7 அல்லது 8 வருடங்களுக்கு முன்பாக 2 ம்பிரதிவாதியை நாகர்கோவில் மருத்துவமனையில் வைத்து பார்க்க சென்றேன். நான் 2 ம்பிரதிவாதியை மருத்துவமனையில் பார்க்கசென்றபோது எந்தகிணற்றில் எப்படி விபத்து நடந்தது என்று கேட்டுதெரிந்துகொண்டேன். அவர் எங்களுடைய கிணற்றில் தவறிவிழுந்துவிட்டதாக என்னிடம் சொன்னார். 1981 வருடத்திலிருந்தே நான் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன் என்றால் சரிதான். விவசாயமும் பார்ப்பேன். எனக்கு 29 வயதில் திருமணம் நடந்தது. திருமணம் நடந்ததில் இருந்து நான் சென்னையில் வசித்து வந்தேனா அல்லது கோவில்பட்டியில் வசித்து வந்தேனா?

என்றால் கோவில்பட்டியில் தோட்டத்தில்தான் வசித்து வந்தேன். கோவில்பட்டியில் தோட்டம் எதுவும் கிடையாது. தாவாசொத்தில் நான் வீடுகட்டியதாகவோ அல்லது வசித்து வந்ததாகவோ காட்டுவதற்கு ஆவணங்கள் ஏதாவது வைத்துள்ளேனா? என்றால் எதுவும் என்னிடம் கிடையாது. திருமணமான காலம்முதற்கொண்டு நான் குடும்பநல அட்டை வைத்துள்ளேன் என்றால் சரிதான். குடும்பஅட்டைகளின் நகல்களை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி குடும்பஅட்டையை தாக்கல் செய்தால் நான் எங்கு வசித்து வந்தேன் என்று தெரியவரும் என்றால் நான் தோட்டத்தில்தான் வசித்தேன். குடும்ப அட்டையை தாக்கல் செய்தால் தெரியவரும் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.8 ரசீது வழக்கிற்கு முன்பாக பெறப்பட்ட ரசீது என்றால் சரிதான். பழைய ரசீதுகள் என்னிடம் தோட்டத்தில் இருக்கிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்)R.Rathinavel Pandian
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி